## ආයතනයේ නම : වන සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගණු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

## நிறுவனத்தின் பெயர் : வனப் பாதுகாப்புத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுத்த நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

## Name of the institution: Department of Forest Conservation

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order NO. 199(4)

பாராளுமன்ற வெளியீடுகளின் தொடர் இலக்கம்: 183
நிறுவனத்தின் பெயர்: வனப் பாதுகாப்புத் திணைக்களம்

| 2020 நிதியாண்டுக்கான நிதி மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள். | அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ∴ தற்போதைய நிலைமை |
|---|---|
| முதலாவது பகுதி : | |
| 1. வருடாந்த நிதிக் கூற்றானது உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ➢ உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (2021.02.28 ஆந் திகதியில்) |
| 2. அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கை உரிய தினத்தில் சமர்ப்பிக்காமை. | ➢ உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (2021.02.28 ஆந் திகதியில்) |
| 3. கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து கணக்காய்வு ஐயவினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ➢ அனேக கணக்காய்வு விசாரணைகள் வலய அலுவலகங்களுக்கு, மாவட்ட அலுவலகங்களுக்கு மற்றும் பல்வேறுபட்ட பிரிவுகளுக்கு உரியன என்பதால் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு காலநேரம் தேவைப்படும். ஆதலால் கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாதத்துக்குள் பதில் அளிப்பதில் நடைமுறைச் சிக்கல் காணப்பட்டது. முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆகக் குறைந்த காலப்பகுதிக்குள் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 4. உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாதத்துக்குள் பதிலளிக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. | ➢ கணக்குப் பிரிவில் உள்ள அதிக வேலைப்பளு காரணமாக ஒரு மாதத்திற்குள் பதில்களை வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுண்டு. பல ஐய வினாக்களுக்கு இரண்டு மாதங்களுக்குள் விடை அளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, பல கணக்காய்வு ஐயவினாக்கள் வலய அலுவலகங்களுக்கும், மாவட்ட வன அலுவலகங்களுக்கும், பல்வேறு பிரிவுகளுக்கும் உரியதெனின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்கென காலம் எடுக்கின்றது. அதனால், கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களை வழங்குதலானது நடைமுறை ரீதியில் கடினமான காரியமாகும். இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஆகக்குறைந்த காலப்பகுதியுள் பதில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 5. வாகனமொன்று அகற்றப்படுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டு 06 மாதங்களுக்கு குறைந்த காலத்தில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | ➢ 2022 ஆம் ஆண்டில் வாகனங்களை அகற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 19 மாவட்டங்களில் அகற்றலுக்கான மதிப்பீட்டுக் குழுக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 6. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 30/2016 இன் அடிப்படையில் நிறுவனத்திலுள்ள வாகனங்களில் எரிபொருள் தகனம் தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. | ➢ ஊழுஏஐனு 19 தொற்றுநோய் பரவல் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, எரிபொருள் பற்றுதல் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை எனினும் 2023ஆம் ஆண்டிற்கான பரிசோதனைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச கொள்கைத் தீர்மானங்களுக்கமைய மானிய முறையில் எரிபொருள் வழங்குவதால் இப்பரிசோதனையை மேற்கொள்ளுதல் சிறிது கடினமாகும். |
| 7. உரிய தினத்தில் வங்கிக் கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை. | ➢ 2020 ஆம் வருடத்திற்காக ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தை இற்றைவரைப்படுத்தும்போது |

| | |
|---|---|
| | ஏற்பட்ட பிரச்சினை காரணமாக முதல் சில மாதங்கள் தாமதமாகியதுடன், பின்னர் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 8. மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னரான வருடங்களிலிருந்து வருகின்ற செயற்படாத வங்கிக் கணக்கு சரியாக்கப்படவில்லை. | ➢ செயற்படாத அனைத்து வங்கிக் கணக்குகளையும் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு அமைவாக வலய மற்றும் மாவட்ட வன அலுவலகங்களில் 25 வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் சில மட்டுமே செயற்படாமல் காணப்படுகின்றன. தற்போது அது தொடர்பில் வலய அலுவலகங்களில் தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன், கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் 06 மாத காலப்பகுதியில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படாத வங்கிக் கணக்குகள் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் மூடப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| 9. வங்கிக் கூற்றுக்களின் மூலம் தெரியவந்த சீராக்க வேண்டிய மீதிகள் தொடர்பில் நி.பி. பிரகாரம் ஒரு மாதத்துக்குள் சீராக்கப்படாமை. | ➢ வங்கிக்கூற்றுக்களின் மூலம் தெரிய வந்த சீராக்கல்களுள் பல பின்னர் நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக சரிசெய்யப்பட்டது.<br>➢ 2023 ஆம் நிதியாணடடின் பெப்ரவரி மாதத்தில் வங்கிக் கூற்றின் ஊடாக அனைத்து இணக்கங்களும் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 10. ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதி தொடக்கம் காணப்படுகின்ற நிலுவைக் கடன் மீதி | ➢ உரிய நிலுவை கடன் மீதிகளை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்தோ அல்லது பிணையாளர்களிடமிருந்தோ அறவிட்டுக் கொள்வதற்கும், அல்லது சட்டரீதியான செயற்பாடுகள் ஊடாக அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்பொருட்டு ஒரு குழுவை நியமித்து அதன் சிபாரிசுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| 11. பொது வைப்புக் கணக்கில் காலங்கடந்த வைப்புத் தொடர்பில் நி.பி.571இன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ➢ நி.பி.571இன் பிரகாரம் அடையாளங்காணப்பட்ட கடந்த கால வைப்புக்களை அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, |
| 12. மீளாய்வு ஆண்டுக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றுகை அறிக்கை உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ➢ 2020 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையின் ஆரம்ப வரைவு உரிய தினத்தில் பூர்த்தி செய்திருந்தாலும், தமிழ் மொழி பெயர்ப்பு, அச்சுப் பதிப்பு மற்றும் ஒப்பீட்டுப் பார்த்தல் போன்றவற்றினால் காலதாமதமாகியது. எதிர்வரும் காலங்களில் இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

இரண்டவது பகுதி:

| | |
|---|---|
| நிறுவனம் பேணுகின்ற வெப் தளத்தில் பொதுமக்கள் முறைப்பாடுகள் அல்லது நிறுவனத்தில் தற்போது பேணிச் செல்லப்படுகின்ற இணையத்தளத்தில் காணப்படும் | ➢ திணைக்களத்திற்குரிய பொதுவான தகவல்கள், தொழிநுட்ப தகவல்கள், தரவுகள், வரைபடங்கள், சுற்றுச்சூழல் சுற்றுலாத் தகவல்கள், உயிரியல் பல்வகைமைத் தகவல்கள், சட்டரீதியான தகவல்கள் போன்றவற்றை பொதுமக்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு ∴ அறிந்து கொள்வதற்கு 2018ஆம் ஆண்டில் இணையத்தளமொன்று |

| | |
|---|---|
| தொழிநுட்ப கோளாறு காரணமாக முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்பிடுவதற்கு புதிய பாராட்டுக் குறிப்புகள் இடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. | நிருமாணிக்கப்பட்டது. எனினும், பிற்காலங்களில் பயனர்கள் எதிர்பார்த்த விதத்தில் அது பயன்படுத்துவதற்குப் பொருத்தமான வகையில் காணப்படாமையும் (ருளநச குசநைனெடல), உரிய விதத்தில் பேணிச் செல்லப்படாமையும், இற்றைவரைப்படுத்தப்படாமையும், பல்வேறு தொழிநுட்பக் கோளாறுகள் ஏற்பட்டதன் காரணமாகவும், அதன் செயற்பாடுகள் குறைந்து வந்தன. தற்போதுவரை உரிய இணையத்தளம் காணப்பட்டாலும் அதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட சேவைகள் பெறப்படாமல் அது செயலிழந்துள்ளது.<br><br>எனினும் இணையத்தளமொன்றின் அவசியம் காரணமாக கடந்த வருடத்தில் (2022) இணையத்தளமொன்றை நிருமாணிப்பதற்காக தொழிநுட்ப குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் விடய நிருணய பத்திரமொன்று (வுழுசு) தயாரிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், கடந்த வருடத்தில் 2ஆம் காலாண்டு தொடக்கம் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்குகள் குறைப்புக் காரணமாக இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் திரும்பப் பெறப்பட்டன. அதன் காரணமாக இந்த இணையத்தளத்தை தயாரிக்கும் செயற்பாடுகள் இடைநடுவே கைவிடப்படும் நிலை ஏற்பட்டது.<br><br>இந்த வருடத்திலும் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஏற்பாடுகளை வழங்குமாறு கோரப்பட்டிருந்தாலும், அதற்கான ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை. எனினும் இந்த நடவடிக்கைகள் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்படவேண்டுமென்பதால், ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனிடையே இச்செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்குரிய தொழிநுட்ப விடயங்களை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| அரசாங்க நிருவாக ஏற்பாடுகளுக்கமைய உரிய முறையில் தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமிடல்கள் காணப்படவில்லை. | ➢ ஊழுஏஐனு 19 தொற்றுநோய் நிலைமைகள் காரணமாக அலுவலக செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறாததோடு, 2022ஆம் ஆண்டிற்கு பொருத்தமான மனிதவள திட்டமிடல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| தயாரிக்கப்பட்ட மனதவளத் திட்டமிடல்கள் ஊடாக ஒரு ஊழியருக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலப் பயிற்சி திட்டமிடப்படவில்லை. | ➢ 2020 ஆம் ஆண்டில் பிரதான அலுவலகத்தினதும் வெளிக்கள உத்தியோகத்தர்களினதும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தேவையான விதத்தில் பயிற்சி திட்டமிடலொன்று தயாரிக்கப்பட்டது. இந்த திட்டமானது கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 2020ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. |
| அனைத்து பணியாற்றொகுதியும் உள்ளடங்கியதான செயலாற்றுகை உடன்படிக்கையை தயாரித்து உடன்படிக்கை செய்திருக்கவில்லை | ➢ 2020 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நிலைமைகளின் காரணமாக அலுவலக செயற்பாடுகள் உரிய விதத்தில் இடம்பெறாததன் காரணமாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முடியாமல் போனது. எனினும் இதுவரை 2023ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| திட்டமிடப்பட்ட பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தும் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் 50மு குறைத்தமட்டத்தில் | ➢ 2020 ஆம் ஆண்டில் பிரதான அலவலகம் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து தகவல்கள் திரட்டப்பட்டு தேவைக்கேற்ப பயிற்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இந்த திட்டங்களை கோவிட் தொற்று நிலைமைகள் காரணமாக 2020ஆம் ஆண்டில் |

| | |
|---|---|
| காணப்பட்டது. | நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. |
| கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் சரிசெய்யப்படவில்லை | ➢ கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் இயலுமானவரை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| அடையாளங் காணப்பட்ட செயலாற்றுகை குறியீட்டின் அடைவானது 50மூஇனைவிட குறைந்த அளவில் காணப்பட்டது. | ➢ ஊமுஏஐனு 19 தொற்று நிலைமைகள் காரணமாக அலுவலக செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறாததன் காரணமாக, செயலாற்றுகை குறியீடுகளை அடைந்து கொள்ளும் மட்டமானது எதிர்பார்த்த அளவில் இடம்பெறவில்லை. 2023ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகளை அடைந்து கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| அடையாளங் காணப்பட்ட செயலாற்றுகை குறியீட்டின் அடைவானது 50மூஇனைவிட குறைந்த அளவில் காணப்பட்டது. | ➢ ஊமுஏஐனு 19 தொற்று நிலைமைகள் காரணமாக அலுவலக செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறாததன் காரணமாக, செயலாற்றுகை குறியீடுகளை அடைந்து கொள்ளும் மட்டமானது எதிர்பார்த்த அளவில் இடம்பெறவில்லை. 2023ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகளை அடைந்து கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| ஆடையாளங் காணப்பட்ட செயலாற்றுகை குறியீட்டின் அடைவானது 50மூஇனைவிட குறைந்த அளவில் காணப்பட்டது. | ➢ ஊமுஏஐனு 19 தொற்று நிலைமைகள் காரணமாக அலுவலக செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறாததன் காரணமாக, செயலாற்றுகை குறியீடுகளை அடைந்து கொள்ளும் மட்டமானது எதிர்பார்த்த அளவில் இடம்பெறவில்லை. 2023ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகளை அடைந்து கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

டீ.பீ.ஹெட்டிஆரச்சி
பணிப்பாளர் நாயகம் (நிதி) பதில்கடமை)
வனப்பாதுகாப்புத் திணைக்களம்

T.P. Hettiarachchi
Director (Finance) Acting
Department of Forest Conservation
Sampath... ...watta.

கே.எம்.ஏ.பண்டார
வனப்பாதுகாப்பு நாயகம்
வனப்பாதுகாப்புத் திணைக்களம்

Dr. K. M. A. Bandara
Conservator General of Forests

ஆர்.எம்.சீ.எம்.ஹேரத்
செயலாளர்
வன சீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு

R.M.C.M. Herath
Secretary
Ministry of Wildlife and
Forest Resources Conservation